DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF PROCEDURE)
IN THE COURT OF DISTRICT MUNSIF, VANIYAMBADI, THIRUPATTUR DISTRICT

| | | | |
|---|---|---|---|
| Name | எத்திராஜ் | Village | முல்லை |
| Father's Name | கிருஷ்ணன் | Taluk | வாணியம்பாடி |
| Age | 63 | Calling | விவசாயம் |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1872 on the day of **02.12.2025**

**O.S. No. 24/2017 வா.சா.4 3.18 PM – 3.35 PM**

**முதல் விசாரணை**

இவ்வழக்கில் 3–ம் நபர் ஆவேன். வாதிகள் தரப்பில் 4–வது சாட்சியாக எனது முதல் விசாரணை வாக்குமூலத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள சங்கதிகள் அனைத்தும் எனக்கு தெரியும். படிக்க கேட்டேன் நான் சொன்னபடி இருந்தது. அதன் பின்னர் அதில் கையொப்பம் இட்டேன்.

**குறுக்கு விசாரணை**

1. என் ஊருக்கும், வழக்கு சொத்து உள்ள ஊருக்கும் சுமார் 15 கி.மீ. தொலைவு இருக்குமா என்றால் சுமார் 5 கி.மீ. இருக்கும். வழக்கின் 1 ம் வாதி என்ன வேலை செய்து வந்தார் என்றால், பெங்களூரில் பெயிண்டிங் வேலை செய்து வந்தார். வாதிகளும், பிரதிவாதி வசந்தாவும் வேறு வேறு இனத்தை சேர்ந்தவர்கள் என்றால், சரியல்ல, ஒரே இனத்தை சேர்ந்தவர்கள்.

2. வழக்கின் 1 ம் வாதி, பிரதிவாதியை அவரது தாயாருக்கு துணையாக இருக்கும்படி எந்த தேதியில் விட்டுவிட்டு சென்றார் என்றால் நினைவில்லை.எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் நான் கூறியிருக்கும் வீட்டிற்கு கதவு எண், வரிவிதிப்பு எண், தெருவின் பெயர் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வீட்டிற்கு கொடுக்கப்பட்டுள்ள மின் இணைப்பு எண் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. பிரதிவாதி சாந்தி என்பவரிடம் ஆசை வார்த்தை கூறி ஏற்படுத்திக் கொண்டதாக கூறப்படும் ஆவணத்தின் எண், தேதி மற்ற விவரம் தெரியுமா என்றால், தெரியாது.

3. வழக்கறிஞர் அறிவிப்பு யார் யாருக்கு அனுப்பினார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். சாந்தி என்பவர் எந்த வருடம், எந்த தேதியில் இறந்தார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. 1 ம் வாதிக்கு எந்த தேதியில் வாரிசு சான்றிதழ் கொடுக்கப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. பட்டா, சிட்டா மாற்றம் செய்ய யார் வட்டாட்சியர் அலுவலகத்தில் விண்ணப்பித்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

4. வழக்கு சொத்து ஆதியில் முனிக்கான் குமாரர் நல்லைய போயன் என்பவருக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான். அந்த நல்லைய போயன்

என்பவர் 11.04.1966 அன்று தன்னுடைய மனைவி சின்னு அம்மாளுக்கு தான செட்டில்மெண்ட் செய்து வைத்து விட்டார் என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது.

5. சாந்தி என்பவர் வழக்கு சொத்தை சின்னு அம்மாளிடம் இருந்து கிரயம் பெற்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. சாந்தி அம்மாள் 27.09.2006 தேதியில் வழக்கு சொத்தை பிரதிவாதி வசந்தாவிற்கு கிரயம் கொடுத்து விட்டார்கள் என்றால் சரிதான். கிரயம் பெற்ற காலத்தில் இருந்து இந்த வழக்கு சொத்து வசந்தாவின் சுவாதீனத்தில் இருந்து வருகிறது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

6. வழக்கு சொத்து குறித்து பிரதிவாதி பெயருக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வழக்கு சொத்திற்கு நான் கடைசியாக எந்த வருடம் சென்றேன் என்றால் சுமார் 15 வருடம் இருக்கும். வழக்கு சொத்தை கிரயம் பெற்ற பின்னர் பிரதிவாதி வீடு கட்டி அவர் தான் குடியிருந்து வருகிறார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பிரதிவாதியின் கணவர் என்ன வேலை செய்து வந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

7. வழக்கு சொத்து பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டசொத்து என்றாலும், பிரதிவாதியின் சுவாதீன அனுபவத்தில் தான் இருந்து வருகிறது என்றாலும் ஒரு போதும் வாதிகள் சுவாதீனத்தில் இருந்ததில்லை என்றாலும் அது பற்றி எனக்கு தெரியாது. எனது முதன்மை வாக்குமூலம் தட்டச்சு செய்யப்பட்டு தயாராக வைக்கப்பட்டிருந்தது, அதில் நான் கையொப்பம் மட்டும் செய்தேன் என்றால் சரிதான். அதில் என்ன விவரம் இருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

***குறுக்கு விசாரணை முடிவுற்றது, மறுவிசாரணை இல்லை.***

ESHWAR VISWANATHAN

DISTRICT MUNSIF
Digitally signed by ESHWAR VISWANATHAN
Location: VANIYAMBADI
Date: 2025.12.11 15:33:35 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

*வாணியம்பாடி.*